

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்றத் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை நிகழ்ச்சியில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி, திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி.கே.கலைவாணன் ஆகியோர் கழகத்தின் மூத்த முன்னோடியும் அன்னை தயாளு அம்மாள் அவர்களின் சகோதரருமான கோ.தட்சிணாமூர்த்தி அவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் தளி சட்டமன்ற தொகுதியில் மேற்கு மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. தலைமையில் தமிழ்நாடு தலைகுனியாது மாபெரும் பொதுக் கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ், மாவட்ட துணைச் செயலாளர் சின்னசாமி, பொருளாளர் சுகுமாரன்,ஒன்றிய செயலாளர்கள் சீனிவாசலூரெட்டி, திவாகர், ராஜா (எ) தணிகாசலம், ஸ்ரீதர், பேரூர் கழக செயலாளர்கள் சீனிவாசன் தஸ்தகீர் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.



கரூர் மாவட்டம் நெரூரையும், திருச்சி மாவட்டம் உன்னியூரைம் இணைக்கும் வகையில் காவிரி ஆற்றின் குறுக்கே ரூ 101. 25 கோடி மதிப்பில் கட்டப்பட்ட உயர்மட்டப் பாலத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து புதிய வழித்தடப் பேருந்துகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி தொடங்கி வைத்து பொதுமக்களுடன் பாலத்தை பார்வையிட்டார்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் அரூரில் நடைபெற்ற "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரை கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி மற்றும் எம்.எம்.அப்துல்லாஆகியோர் சிறப்புரை ஆற்றினர். உடன் ரவி,நாட்டான். மாது, சி.கிருஷ்ண குமார், ரேணுகா தேவி மற்றும் சந்திரமோகன்,வேடம்மாள், ரத்தினவேல், சௌந்திரரசு, வைகுந்தம்,செங்கண்ணன், தென்னரசு,சூர்யா தனபால், இளைஞர் அணி அசோக்குமார், உள்ளிட்ட ஏராளமான தி.மு.க. வினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### மார்ச்.1- கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

# மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் எழுச்சியுடன் கொண்டாட்டம் - நல உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிக்கை!



மயிலாடுதுறை, பிப்.28 -

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதா வது.

கழகத் தலைவர், திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் திராவிட மாடல் அரசர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க ஸ்டாலின் அவர்கள் கழகத்தில் கழக அடிப்படை உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், இளைஞர் அணி செயலாளர், கழக துணை பொது செயலாளர், கழக பொருளாளர், கழக துணை தலைவர், கழகத் தலைவர் என்றும், பொது வாழ்வில் சென்னை மாநகர மேயர், சட்ட மன்ற உறுப்பினர், தமிழ்நாடு துணை முதல்வர், தமிழ்நாடு முதல்வர் என்று உழைப்பால் உயர்ந்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் ஸ்டாலின் என்றால் உழைப்பு! உழைப்பு! என்று பாராட்டு பெற்ற நமது கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்த நாளை மார்ச் 1ஆம் தேதி கழகத்தினரால் எழுச்சியுடன் கொண்டாடப்படுகிறது.

கழகத் தலைவர் தளபதி, திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்ட முடிவின் படி மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைகள், வார்டுகள் தோறும் மார்ச். 1 ம் தேதி மற்றும் மார்ச் மாதம் முழுவதும் கழகக் கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்கியும், ஏழை எளியவர்களுக்கு நலதிட்ட உதவிகள் வழங்கியும், மரக்கன்றுகள் வழங்கியும், நட்டும், ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களிலும், ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்களில் உள்ளவர்களுக்கு உணவு மற்றும் உடை வழங்கியும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம், தெருமுனை பிரச்சார கூட்டங்களை நடத்தியும், மார்ச் 1ஆம் தேதி அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மேடை பேச்சுகளையும், கழகத் தலைவர் தளபதி அவர்களின் மேடை பேச்சுகளையும், கழக பாடல்களையும் பள்ளி மாணவ மாணவிகள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் ஒலிப்பரப்பி கழகத் தலைவர் திராவிட மாடல் அரசர் அவர்களின் பிறந்த நாளை எழுச்சியுடன் கொண்டாடிட வேண்டும்.

மேலும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் கழகத்தினருக்கு கழகத்தலைவர் பிறந்த நாள் நிகழ்ச்சிகளை சிறப்பாக கொண்டாடிட அறிவுறுத்திட வேண்டும் என்றும், கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சி களில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள். நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், நகர்மன்ற பேரூராட்சி மன்ற முன்னாள், இந்நாள் நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைரும் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டும்.

இவ்வாறு தனது அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கூறியுள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிபட்டியில் உள்ள தனியார் மண்டபத்தில் நடந்த தொழில்முனைவோர் சந்திப்பு கூட்டத்தில் திமுக மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் மற்றும் திமுக கொள்கை பரப்பு செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ ஆகியோர் அப்பகுதி சுய தொழில்முனைவோர், வியாபாரிகளிடம் அவர்களது தேவைகள் மற்றும் கருத்துகளை கேட்டறிந்தனர். உடன் கே.மனோகரன், அ.சத்தியமூர்த்தி, சி.முத்துக்குமார், பி.எஸ்.சரவணன், பிரபுராஜசேகரன், இரா.சித்தார்த்தன், கு.கௌதமன், இளம் பேச்சாளர் ரமேஷ் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

## திருத்தணி எஸ்.விஸ்வநாதன் மறைவு!

திருவள்ளூர், பிப். 28-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரனின் சகோதரர் விஸ்வநாதன் (எ) ரவி அவர்கள் நேற்று முன்தினம் (26.02.2026 - வியாழக் கிழமை) காலை 8 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் உடல் திருத்தணி எஸ்.பி.ஐ. வங்கி அருகில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதி ஊர்வலம் அவரது இல்லத்தில் இருந்து நேற்று (27.2.2026 வெள்ளிக்கிழமை) பகல் 12.00 மணி அளவில் புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை! ந.இராமசாமி-போர்வாள் கதிரவன் பங்கேற்பு!

# பெங்களூருவில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா-மாநாடு!

## கர்நாடக அமைச்சர் எச்.சி.மகாதேவப்பா தொடங்கி வைக்கிறார் - முன்னணியினர் சிறப்புரை!

பெங்களூரு, பிப்,28-

கர்நாடாக மாநிலத் திராவிடர் கழகம் சார்பில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா- எழுச்சி மாநாடு-2026 இன்று (28.2.2026-சனிக் கிழமை) காலை 10 மணி முதல் இரவு 8.30 மணி வரை, பெங்களூரு, வசந்தநர், காவேரப்பா லேஅவுட், மில்லர்ஸ் ரோட்டில் அமைந்துள்ள தேவராஜ் அர்ஸ் பவனில் நடைபெறுகின்றது. இம் மாநாட்டிற்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையேற்று விழா பேருரையாற்றுகிறார்.

எஸ்.குணவேந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். கர்நாடக மாநில சமூக நலத்துறை அமைச்சர் டாக்டர் எச்.சி.மகாதேவப்பா நிகழ்ச்சியை தொடங்கி வைக்கிறார். கர்நாடக மாநில சட்டமேலவை உறுப்பினர் பி.கே. அரிபிரசாத் அறிமுக உரை நிகழ்த்துகிறார்.

முன்னாள் நீதியரசர் எச். என். நாகமோகன் தாஸ், வழக்கறிஞர் ரவிவர்மகுமார், ரிஸ்வான் அர்ஷத் எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

நிறைவு விழாவிற்கு பேராசிரியர் எஸ்.ஜி.சித்தராமையா தலைமை வகிக்கிறார். கர்நாடக மாநில அமைச்சர் பிரியாங்க் கார்கே, எஸ்.காந்தராஜ், கே.எஸ்.பகவான், பஞ்சகெரே ஜெயபிரகாஷ், சேத்தன் அகிம்சா, கர்நாடக மாநில தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் ந.இராமசாமி, டிநரசிம்மமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரைவழங்குகின்றனர்.

நிறைவாக திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் மாநாட்டுப் பேருரையாற்றுகிறார்.

சமூக நீதிக்கான இதழியாளர் சங்கத் தலைவர் முத்து மணி நன்னன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கர்நாடக மாநில தி.மு.க.பொறுப்புக்குழுத் தலைவர் மொ.பெரியசாமி, மு.ஜானகிராமன், கு.செயகிருட்டிணன், வீ.மு.வேலு, பு.ர.கஜபதி, இரா. முல்லைக்கோ மற்றும் போர்முரசு கதிரவன் உள்ளிட்ட முன்னணியினர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பிற்பகல் 12 மணி முதல் 2 மணி வரை சுயமரியாதை இயக்கம் நிகழ்காலமும், எதிர்காலமும் என்ற தலைப்பில் ஆய்வரங்கம் ஒன்றும், பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை உலகமயமாகும் பெரியார் கொள்கைகள் என்ற தலைப்பில் ஆய்வரங்கம் இரண்டும் நடைபெறுகின்றன. இவ் விரண்டு ஆய்வரங்கங்களிலும் அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்டு தங்களின் கருத்துரைகளை வழங்குகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். காத்தவராயன்

பிப்ரவரி 28 (2020)



தனது இளமைப் பருவத்திலேயே கழக உறுப்பினராகி பணியாற்றி வந்தவர்.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட பிரதிநிதி, மாவட்ட துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

பேர்ணாம்பட்டு நகர்மன்றத் தலைவராகவும், 2019ல் நடைபெற்ற குடியாத்தம் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மக்கள் பணியாற்றி அவர்கள் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி. நித்யானந்தம்

பிப்ரவரி 28 (2020)



இளமைக் காலம் முதல் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

நகர இளைஞர் அணி அமைப்பாளர், நகரச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

வாலாஜா நகர்மன்ற உறுப்பினராகவும், பின்னர் நகர்மன்றத் தலைவராகவும் பதவி வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.